# பரத நாட்டியம்

தரம்

8

## ஆசிரியர் வழிகாட்டி

(2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)



அழகியற் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
www.nie.lk
info@ni.lk

# பரத நாட்டியம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 8

**(2017ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)**


**அழகியற்கல்வித் துறை,**
**மொழிகள், மானுடவியல் சமூக விஞ்ஞான பீடம்,**
**தேசிய கல்வி நிறுவகம்,**
**மஹரகம**
**இலங்கை.**
**www.nie.lk**
**info@nie.lk**



**அச்சிடுதலும் விநியோகமும் : கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.**

பரத நாட்டியம்
ஆசிரியர் வழிகாட்டி
தரம் - 8
பாடத்திட்டம் - 2017

தேசிய கல்வி நிறுவகம்

ISBN

முதற் பதிப்பு : 2017
தேசிய கல்வி நிறுவகம்

அழகியற் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல் சமூகவிஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை.
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

***அச்சுப் பதிப்பு:***

**இந் நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,**
**சிசாரா பிரின்ட்வே பிறைவேட் லிமிட்டட்**
**அச்சகத்தால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.**

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்ட பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினை பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்கு தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி. ஜெயந்தி குணசேகர,**
பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்,
மகரகம.

## கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

பிரபஞ்ச அறிவு வளர்ச்சியைக் கவனத்திற்கொண்டு பாடத்திட்டத்தை மாற்றி அமைப்பதானது காலத்தின் தேவையாகும். அவ்வாறு இடம்பெற்ற புதிய பாடத்திட்ட மறுசீரமைப்புக்கிணங்க புதிதாக எழுதப்பட்ட பாட நூல்களை மாணவர் பயன்பாட்டிற்கு உட்படுத்தும் செயற்பாடு 2015ஆம் ஆண்டு ஆரம்பமானது. அந்த வருடம் தரம் 6, தரம் 10 வகுப்புகளுக்காகப் புதிய பாடநூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இச் செயற்பாட்டின் மற்றுமொரு கட்டமாக 2017ஆம் ஆண்டு முதல் தரம் 2 இற்கும் தரம் 8 இற்கும் புதிய பாடநூல்களை அச்சிட்டு வழங்குவதற்குக் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

புதிய பாடத்திட்டத்திற்கிணங்க எழுதப்பட்ட பாடநூல்களுக்கு இசைவாக மாணவர்களுக்குக் கல்வியை வழங்கும்போது ஆசிரியர்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளைக் குறைக்கும்பொருட்டு தேசிய கல்வி நிறுவகம் மூலம் ஆசிரியர் வழிகாட்டிகள் ஆக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஆக்கப்பட்ட இந் நூலை அச்சிட்டு உங்கள் கைகளில் வழங்குவதன் மூலம் நாம் எதிர்பார்ப்பது எதிர்கால உலகிற்கு பொருந்தக்கூடிய சிறந்த பிரஜைகளை உருவாக்குவதற்காக நீங்கள் படும் சிரமத்திற்கு உதவியொன்றை வழங்குவது மட்டுமே. இவ் ஆசிரியர் வழிகாட்டியை மட்டும் வெறுமனே செயப்படுத்துவதற்குப் பதிலாக படைப்பாற்றல் மிக்க ஆசிரியர் வகிபாகத்தை வழங்கி எதிர்பார்க்கும் மாணவர் அடைவு மட்டத்தை நோக்கி உங்கள் மாணவர்களை வழிநடத்துவதற்கு வழிகாட்டுவது மாத்திரமே இந் நூல் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. வெற்றிகரமான ஆசிரியரொருவராக உங்களிடம் எதிர்பார்க்கின்ற கற்பித்தல் பயன்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு இந் நூல் உங்களுக்கு உதவுமென எண்ணுகின்றேன்.

**டபிள்யூ.டி.பத்மினி நாளிகா,**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
இசுருபாய,
பத்தரமுல்ல,
2016.06.15

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்குமான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக் கோலத்தை உருவாக்கிக் கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்பெறும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப் பெறுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மையைத் தேசிய மட்டத்திற் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடையும் பொருட்டு, பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்ளும் சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பெற்றுள்ள ஆசிரியர் வழிகாட்டியை, ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், எதிர்பார்க்கப் பெறும் அடைவுகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர் களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். மகிழ்வளிக்கத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி மாபுல்கொட சுமனரதன தேரர்,**
**பிரதிப் பணிப்பாளர் நாயகம்,**
மொழிகள், மானுடவியல், சமூகவிஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

## கலைத்திட்டக் குழு

| | | |
|---|---|---|
| ஆலோசனையும் வழிகாட்டலும் | : | கல்விசார் அலுவல்கள் சபை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| பாட நிபுணத்துவ ஆலோசனை | : | திரு. சுதத் சமரசிங்ஹ,<br>பணிப்பாளர் - அழகியற்கல்வித் துறை. |
| பாட இணைப்பாக்கம் | : | திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்,<br>செயற்றிட்டத் தலைவர்,<br>அழகியற்கல்வித் துறை. |
| எழுத்தாளர் குழு<br>(உள்வாரி) | : | திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்,<br>செயற்றிட்டத் தலைவர்,<br>அழகியற்கல்வித் துறை. |
| (வெளிவாரி) | : | திருமதி பாரதி சிவயோகநாதன்,<br>ஆசிரிய ஆலோசகர்,<br>வலயக்கல்வி அலுவலகம், கொழும்பு - 02. |
| மொழி மேற்பார்வை | : | திரு.எஸ்.செல்வகுமார்,<br>ஆசிரியர்,<br>யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை. |
| கணினி கோர்ப்பும் வடிவமைப்பும் | : | செல்வி க.தாட்ஷாயனி, |
| அட்டைப்பட வடிவமைப்பு | : | திரு. ரவீந்ர தேநுவர |

# ஆசிரியர் கைந்நூலைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள்

2017 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தரம் 8இற்கான பரதநாட்டிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தற் செயன்முறையை வெற்றிகரமாக நடத்துவதற்குத் துணைபுரிவதற்காகவே இந்த ஆசிரியர் வழிகாட்டி உங்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றது. இதனைப் பயன்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

❖ பாடசாலையின் வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கமைவாக நேரமுகாமை செய்தல்.

❖ 5 தேர்ச்சிகளின் கீழ், வரிசைப்படுத்தப்பட்டுள்ள உள்ளடக்கத்திற்கமைவாக 1.0 தொடக்கம் 5.0 வரையிலான செயன்முறைத் தேர்ச்சிகளின் மட்டங்களுக்காக மாதிரிச் செயற்பாடானது தரப்பட்டுள்ளது. அந்தந்தத் தேர்ச்சி மட்டத்திற்கமைவாக விதந்துரைக்கப்பட்டுள்ள 5 தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு, திட்டமிட்டுச் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

❖ தாமே 5 செயற்பாடுகளைச் செயற்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனமெடுப்பது பயனுடையதாகும்.
  - ➢ அழகியல் சார்ந்த அன்றேல் பாடத்துடன் இணைந்த சுவாரசியமான முன்வைப்பொன்றின் மூலம் களிப்பூட்டத்தக்கவாறு படிக்கும் விடயங்களின் மூலம் மாணவரைப் பாடத்தின் பால் ஈர்த்தல். முன்நிலை மீட்டல், ஊக்கமளித்தல் மூலம் பாடச் செயற்பாட்டை அணுகுதல்.
  - ➢ மாணவரது இயல்பான ஆற்றல்களை இனங்கண்டு ஆக்கபூர்வமான கற்றல் கற்பித்தல் முறைகளை மேற்கொண்டு பின்னூட்டலைக் கையாண்டு செயற்பாட்டை இறுதிவரை இட்டுச் செல்லல்.
  - ➢ முன்வைப்புக்கள், மதிப்பீடு, மீளாய்வு, பின்னூட்டல் வேலைகள், ஒப்படைகள் போன்றவற்றை உள்ளடக்கி ஒட்டுமொத்தப் பாடத்தை நிறைவு செய்தல்.
  - ➢ இந்த ஆசிரியர் வழிகாட்டி ஒரு வழிகாட்டல் மாத்திரமே ஆகும். பாடம் சார்ந்த நூல்கள், இணையத்தளங்கள் போன்ற ஊடகங்களை உசாவுதல் மூலம் மாணவர் அறிவூட்டம் பெறுவதால் கற்றல் - கற்பித்தற் செயன்முறையை மேலும் செழுமைப்படுத்திக் கொள்ளலாம்.

❖ அறிமுகம் செய்யப்பட்டுள்ள 5 தேர்ச்சிகளும் தனியாளின் ஆளுமை விருத்தியை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளமையால் 5 தேர்ச்சிகளுக்குமுரிய விடய உள்ளடக்க முறைமையை வகுப்பறையில் நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

❖ பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டவாறு மூன்று தவணைக்குரிய செயற்பாட்டினை வகுப்பறையில் நடைமுறைப்படுத்துக.

| தவணை 1 | தவணை 2 | தவணை 3 |
|---|---|---|
| செயற்பாட்டு இலக்கம் : 1.1.1, 2.1.1, 3.1.1, 3.2.1, 3.3.1, 4.1.1, 4.2.1, 4.2.2, 4.2.3, 4.3.1, 5.2.1 | செயற்பாட்டு இலக்கம் : 1.2.1, 2.3.1, 3.1.2, 3.2.2, 3.3.2, 3.3.3 4.2.4, 4.3.2, 4.3.3, 5.1.1 | செயற்பாட்டு இலக்கம் : 1.3.1, 2.2.1, 2.2.2, 3.1.3, 3.3.3, 3.4.1, 4.2.5, 4.4.1, 4.4.2, 5.1.2 |

**தேர்ச்சி 1:0 : நயத்தல்**

- நயத்தல் தொடர்பான கற்பித்தலை மேற்கொள்ளும் போது, மாணவர்களின் இரசனையைத் தூண்டி அவர்களின் வெளிப்பாட்டை வெளிக்கொண்டு வரவேண்டும். அதற்குக் கவர்ச்சியான முறையில் கற்பித்தற் செயற்பாடுகள் இடம்பெற வேண்டும்.

**தேர்ச்சி 2:0 : ஆக்கத்திறன்**

- ஆக்கத்திறனில் மாணவர்களை ஈடுபடுத்தும் போது, அவர்களுக்குரிய வழிகாட்டல்கள் மாத்திரம் ஆசிரியரினால் வழங்கப்பட வேண்டுமேயல்லாமல் எச் சந்தர்ப்பத்திலும் ஒரு நிகழ்வு ஆசிரியரினால் ஆக்கி வழங்கப்படக் கூடாது.

- அனைத்தும் மாணவர்களின் சொந்தக் கற்பனையாகவே இருக்க வேண்டும்.

**தேர்ச்சி 3:0 : செய்முறை**

- செய்முறைப் பயிற்சியில் ஈடுபடுத்தும் போது, பாத அசைவுகளில் குறித்த தேர்ச்சி மட்டத்தை அடைந்த பின்பு தான் கை அசைவுகளுக்குரிய பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

- பாடவேளை போதாதவிடத்து மேலதிக வகுப்புக்களை நடத்தி மாணவர்களைக் குறித்த மட்டத்தை அடையச் செய்ய வேண்டும்.

- முதலில் காற்செய்கையையும், பின்னர் கைச் செய்கையையும் தனித்தனியாகப் பயிற்சியளித்துத் தொகுத்தல் வேண்டும்.

**தேர்ச்சி 4:0 : அறிமுறை**

- அறிமுறைப் பாடப்பகுதிகள் அனைத்திற்கும் அன்றைய தினக் கற்றல் நடைபெற்று முடிந்த பின்பு மணவர்கள் குறிப்பெடுத்திருத்தல் அவசியமாகும்.

- குறிப்புக்கள் திருத்தப்பட்டு மாணவர்கள் அவற்றை வீட்டில் விரிவான வசன ஆக்கம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

- அதன் பின்புதான் தேவையேற்படின் ஆசிரியர்கள் விரிவான விளக்கக் குறிப்பு வழங்க வேண்டும்.

- எக்காரணம் கொண்டும் ஆசிரியர் வழிகாட்டியில் வழங்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்புக்கள் அப்படியே மாணவர்களுக்கு வழங்கப்படலாகாது.

- அத்துடன், ஆசிரியரின் தேடலும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- அடவுகள், உருப்படிகளுக்கான குறியீட்டு முறை விளக்கம் அளிக்கப்படும் போது, முதலில் ஒவ்வொரு தட்டிற்குமுரிய சொற்கட்டுக்கள் கீழ்காட்டியவாறு எழுதப் பயிற்றுவிக்கவும்.
  **உ+ம் தா தெய் தெய்த அடவு**

# உள்ளுறையாக

**பக்கம்**


| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி | iv |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | v |
| கலைத்திட்டக்குழு | vi |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் | vii - ix |
| அறிமுகம் | x-xi |
| • தேசிய இலக்குகள் | xii |
| • அடிப்படைத் தேர்ச்சிகள் | xiii-xiv |
| • பாடத் தேர்ச்சிகள் | xv |
| பாடத்திட்டம் | xvi-xx |
| கற்றல் கற்பித்தல் செயலொழுங்கிற்கான ஆலோசனைகள் | |
| தவணை I | 01- 18 |
| தவணை II | 19 - 32 |
| தவணை III | 33- 43 |

# அறிமுகம்

ஆரம்பக் கல்வியை நிறைவு செய்து கொண்டு, கனிஷ்ட இடைநிலைப் பிரிவில் 6ஆம் தரத்தில் கல்வியைக் கற்கவரும் மாணவர்களுக்குப் பொருத்தமானதாகப் புதிய பரத நாட்டியப் பாடத்திட்டம் இங்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. புதிய கல்வித் திட்டங்களும் புதிய எண்ணக்கருக்களும் இக்கலைத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம், சித்திரம், நாடகமும் அரங்கியலும் ஆகிய கவின் கலைகள், ஒன்றிணைந்த பாடமாகக் கற்பிக்கப்பட்டு 2007ஆம் ஆண்டிலிருந்து இக்கலைகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக 6ஆம் தரத்தில் இரசித்தல், ஆக்கத்திறன், செய்முறை, அறிமுறை கலாசாரப் பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் கற்றற் தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டு இக்கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டு புதிய சாகரத்தின் இரண்டாம் கலைத்திட்டமாக மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

தற்கால உலகில் மாற்றமடையாத ஒன்று மாற்றம் ஆகும். அதற்கமைய கலைத்திட்டத்திலும் மாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. எந்தவொரு கலைத்திட்ட மறுசீரமைப்பும் இரண்டு அம்சங்களில் மாற்றங்களைப் பிரேரிக்கின்றது.

(1) பாடச் சேர்க்கை - பாடக்கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்தல், பாடவிடயங்களை இற்றைப்படுத்தல்

(2) பாடவிடயங்களை மாணவரிடம் கொண்டு சேர்ப்பதற்காக முன்வைக்கப்படும் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை

மாணவர் மையக் கல்விக்கு முதலிடம் கொடுக்கின்ற இப்புதிய கலைத்திட்டமானது, மாணவர்களும் ஆசிரியரும் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், மாணவர்களின் தேடிக் கற்றலை ஊக்குவிப்பதற்குரிய செயற்பாடுகள் பலவற்றைக் கொண்டதாகவும், கற்றல் - கற்பித்தல் என்பவற்றைத் தெளிவாகப் புரிந்து தாமே விருப்பத்தோடு ஈடுபடுவதற்கு ஏற்றவகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

**தற்காலக் கல்விமுறையின் மூன்று தூண்களாவன:-**

(1) அறிந்துள்ளவற்றைப் பேணிவருதல்.

(2) முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விடயங்களைக் கற்றல்.

(3) ஏற்கெனவே கற்கப்பட்ட விடயத்தை மீண்டும் கட்டியெழுப்புதல் என்பனவாகும்.

இச்செயற்பாடு ஏற்கெனவே அறிந்துள்ளவற்றைத் தொடர்ந்தும் மாற்றியமைத்துப் புதுமைப்படுத்தும் புதிய சமூகமொன்றை உருவாக்கும். இதுவரைகண்டறியப்படாதவை தொடர்பாக, இளம் சந்ததியினரை வழிப்படுத்துவது இன்றியமையாதது ஆகும். தேடலில் ஈடுபட்டு, ஏற்கெனவே அறிந்துள்ளவற்றை மாற்றியமைத்தும், இதுவரை கண்டறியப்படாதவற்றை தேடியறிவதற்கும் மாணவர்களைப் பழக்கப்படுத்துவது இப்புதிய கல்வித் திட்டத்தின் நோக்கமாகும்.

வெற்றிகரமான வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான திறன்கள், ஆற்றல்களை அதாவது ஒன்றிணைந்த ஆளுமைக்கு இன்றியமையாத சிந்தனைத் திறன் (Thinking skill ), சமூகத் திறன் (Social skill ), சுயதிறன் (Personal skill ) ஆகியவற்றை விருத்தி செய்வதற்குரிய காலமாகப் பாடசாலைக் காலத்தில் வழங்கப்படத்தக்கவாறு தயாரிக்கப்பட்ட ஒரு பொதுவான கலைத்திட்டம் இதுவாகும்.

வந்தபின் செயற்படும் அணுகுமுறைக்குப் பதிலாக, வருமுன் செயற்படும் அணுகுமுறையைக் கைக்கொள்வது, இன்றைய எதிர்கால சந்ததியினருக்கு அவசியமானதொன்றாகும். எனவே, நாளைய உலகை வெற்றி பெறுவதற்காகத் தேடலை முனைப்பாகக் கொண்ட வகையில், இப்புதிய கலைத்திட்டம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்கால சமூகத்திற்குத் தேவையான ஆளுமையுடைய சமூகத்தை உருவாக்குவது இப்புதிய பாடத்திட்டத்தின் தாரக மந்திரமாகும்.

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபருக்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

I. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

II மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

III. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

IV. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

V. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

VI. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி.

VII. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

VIII. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## அடிப்படைப் பொதுத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### I. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரு வகையான கருத்துப்பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விவரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழிலில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### II. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சி, நுண்ணறிவு.

### III. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வும் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**V. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**VI. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**VII. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை 2003)

# பாடத் தேர்ச்சிகள்

- பரத நாட்டியத்துடன் தொடர்பான இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் ஊடாக அறிவு, திறன், மனப்பாங்கை வளர்த்துக் கொள்வார்.
- சிறந்த நடனக் கலைஞராக மிளிர்வதற்கான ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்வார்.
- படைப்பாக்கத் திறனை விருத்தி செய்வார்.
- தேசிய, பன்னாட்டுக் கலைகளை அறிந்து மதிப்பளிப்பார்.
- அழகியல் நயப்புடையவராவார்.
- கலைஞர்களை மதிக்கும் உளப்பாங்கை வளர்ப்பார்.
- பண்பாட்டின்பால் பற்றுறுதியையும், மரபைக் கையேற்கும் மனப்பாங்கையும் விருத்தி செய்வார்.
- தன்னாற்றலை இனங்கண்டு, கலை நிகழ்வுகளை ஆற்றுகைப்படுத்தும் திறனை விருத்தி செய்வார்.
- சிறந்த தொடர்பாடற் திறனை விருத்தி செய்வார்.
- தாமாக முன்வந்து அர்ப்பணிப்புடன் செயலாற்றும் திறனைப் பெறுவார்.
- இயற்கையை நயந்து வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.
- நவீன தொழில்நுட்ப சாதனங்களைக் கையாளும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.
- வாழ்தொழிலுக்கான அடிப்படைப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வார்.
- நுட்பங்களைக் கையாண்டு கைவினைக் கலைகளை ஆக்குவார்.
- குழுவாக இயங்கும் பண்பை விருத்தி செய்வார்.
- பன்மைக் கலாசார சமூகத்துடன் சிறந்த ஆளிடைத் தொடர்புகளைப் பேணுவார்.
- சமூக அங்கீகாரம், புகழ் என்பவற்றைப் பெற்றுக் கொள்வார்.
- கலை நுணுக்கங்களை அறிந்து அதனை விபரிக்கும், விமர்சிக்கும் ஆற்றல்களைப் பெற்றுக் கொள்வார்.
- கலைத் தேடலின் ஊடாகப் புதிய முன்வைப்புகளுக்கு முயற்சிப்பார்.
- மூத்த கலைஞர்களுக்குக் கௌரவமளிக்கும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்வார்.

## பாடத்திட்டம்
## தரம் 8

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|---|
| 1.0 | சூழலை இரசித்துத் தமது இரசனையை வெளிப்படுத்துவார். | 1.1 இயற்கைச் சூழலை இரசித்துத் தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார். | • விலங்கினங்களின் அசைவுகள்<br>`• குரங்கு<br>• மான்<br>• முயல்<br>• நரி<br>• ஒட்டகம்<br>• பாம்பு | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• இயற்கைச் சூழலில் விலங்கின் அசைவுகளை நயந்து வெளிப்படுத்துவார். | 02 |
| | | 1.2 கிராமிய நடனங்களை நயந்து வெளிப்படுத்துவார். | • கிராமிய நடனம்<br>• வேப்பிலை நடனம் | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• கிராமிய நடனங்களைப் பரத நாட்டியத்திலிருந்து வேறுபடுத்தி அறிவார்.<br>• கிராமிய வாத்தியங்களை இனங்கண்டு இரசனையை வெளிப்படுத்துவார்.<br>• கிராமிய நடனங்கள் வாழ்வியலோடு பிணைந்திருக்குமாற்றை வெளிப்படுத்துவார். | 01 |
| | | 1.3 கதைப் பாடலை நயந்து வெளிப்படுத்துவார். | • கதைப்பாடல்<br>- வேடனும் புறாவும் | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• வேடனும் புறாவும் பற்றிய கதையினைக் கூறுவார்.<br>• இப்பாடலினை இரசித்து வெளிப்படுத்துவார். | 01 |

# பாடத்திட்டம்
# தரம் 8

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| 2.0 | சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றையும், வெவ்வேறு வகையான பாடல்களையும், கோர்வைகளையும் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார். | 2.1 இயற்கைச் சூழலில் தாம் இரசித்தவற்றைப் பாவனை செய்து காட்டுவார். | • விலங்கினங்களின் அசைவுகள்<br>`• குரங்கு<br>• மான்<br>• முயல்<br>• நரி<br>• ஒட்டகம்<br>• பாம்பு | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• இயற்கையின் அசைவுகளுக்குக் கற்பனை வடிவம் கொடுப்பார்.<br>• தனது கற்பனைகளுக்கு ஏற்ற வகையில் ஆற்றுகைப்படுத்துவார். | 04 |
| | | 2.2 கதைப் பாடல்களுக்கு அபிநயம் அமைத்துக் கொலுப்பித்துக் காட்டுவார். | • கதைப் பாடல்<br>- வேடனும் புறாவும்...<br>- கண்ணன் மாடு கன்று மேய்த்து... | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• பாடல்களின் பொருள் கூறுவார்.<br>• பொருளிற்கேற்ப முத்திரைப் பிரயோகங்களையும் மேற்கொள்வார்.<br>• அபிநயப் பாடல்களுக்குத் தாமே அபிநயம் அமைப்பார். | 06 |
| | | 2.3 கிராமியப் பாடல்களுக்குத் தாமே அபிநயம் அமைத்துக் கொலுப்பித்துக் காட்டுவார். | • வேப்பிலை நடனம் | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• அம்மனை வேண்டி ஆடப்படுவது வேப்பிலை நடனம் என்பதை அறிவார்.<br>• நடனச் சுவடுகளைக் கிராமியப் பாங்குடன் ஆடுவார். | 02 |

## பாடத்திட்டம்
## தரம் 8

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|---|
| 3 . 0 | பரத நாட்டியத்துக்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்களையும், ஜாதி ஹஸ்தங்களையும், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார். | 3.1 முத்திரைகளின் விநியோகங்களை அபிநயிப்பார். | • விநியோகங்கள் முஷ்டி - சிம்கமுகம் | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• விநியோகங்களைப் பொருளுணர்ந்து அபிநயிப்பார்.<br>• கருத்துக்களைக் கூறுவார். | 10 |
| | | 3.2 ஹஸ்தங்களையும் பேதங்களையும் அபிநயித்துக் காட்டுவார். | • பேதங்கள்<br>- சிரோ பேதம்<br>- திருஷ்டி பேதம்<br>- க்ரிவா பேதம்<br>- பாதபேதங்கள் - 4 | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• சிரோ, திருஷ்டி, கிரிவா, பாத பேதங்களை அபிநயித்துக் காட்டுவார். | 05 |
| | | 3.3 பரத நாட்டியத்திற்குரிய அடிப்படை அடவுகளை அபிநயித்துக் காட்டுவார். | • தெய்யா தெய்யி (1-4)<br>• தத் தெய் தாஹா (1-4)<br>• தத் தெய் தாம் (1-3) | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• தெய்யா தெய்யி, தத் தெய் தாம், தத் தெய் தாஹா அடவுகளை முத்திரை சுத்தத்துடன் அபிநயிப்பார்<br>.• அவற்றைக் கொலுப்பித்துக் காட்டுவார். | 32 |
| | | 3.4 வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை அபிநயித்துக் காட்டுவார். | • கோலாட்டம் | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• நடனச் சுவடுகளைக் கிராமியப் பாங்குடன் ஆடுவார்.<br>• பல்வேறு கோலங்களில் அபிநயிப்பார். | 03 |

**பாடத்திட்டம்**
**தரம் 8**

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| 4 . 0 | நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார். | 4.1 அபிநயத்தின் வகைகளை அறிந்து கூறுவார். | • அபிநயம்<br>• ஆங்கிகம்<br>• வாச்சிகம்<br>• சாத்விகம்<br>• ஆஹார்யம் | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• நான்குவித அபிநயங்களையும் குறிப்பிடுவார்.<br>• ஆங்கிக, வாச்சிக, சாத்விக. ஆஹார்ய அபிநயம் ஆகியவற்றின் எண்ணக்கரு விளக்கத்தைக் குறிப்பிடுவார். | 01 |
| | | 4.2 அடவுகளுக்குரிய இசைக் குறியீடுகளைப் பிரயோகிப்பார். | • இசைக் குறியீட்டு விளக்கம்.<br>• தட்டடவு<br>• நாட்டடவு<br>• குதித்து மெட்டடவு<br>• தாதெய் தெய் த<br>• தெய்யா தெய்யி<br>• தத் தெய் தாம் (1-3)<br>• தத்தெய் தாஹா (1-4) | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• இசைக் குறியீடுகளைப் பிரயோகித்து அடவுகளை எழுதுவார். | 10 |
| | | 4.3 பரதநாட்டியத்தின் பொதுவான அம்சங்களை அறிவார். | • சிரோ பேதம்<br>• திருஷ்டி பேதம்<br>• க்ரிவா பேதம்<br>• பாத பேதங்கள்- 4<br>• பாத்திர, அபாத்திர லட்சணங்கள் | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• சிரோ, திருஷ்டி, க்ரிவா, பாத பேதங்களையும் பாத்திர, அபாத்திர லட்சணங்களையும் கூறுவார். | 04 |

# பாடத்திட்டம்
## தரம் 8

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|---|
| | | 4.4 இசைக் கருவிகளை அறிந்து கூறுவார். | •அரங்கதேவதாஸ்துதி<br>• தோற் கருவிகள்<br>• துளைக் கருவிகள்<br>• நரம்புக் கருவிகள்<br><br>• மங்கள வாத்தியம் (நாதசுரம்)<br>. | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• இசைக்கருவிகளின் வகைகளைக் குறிப்பிடுவார்.<br>• அவ் வகைகளிலடங்கும்<br>• இசைக்கருவிகளைக் குறிப்பிடுவார்.<br>• நாதசுரத்தினை இனங்காண்பார்.<br>• அதன் தோற்றம், பாவனை முறை பற்றி விபரிப்பார்.<br>• பெயர் வரக் காரணம் பற்றிக் குறிப்பிடுவார்.<br>• நாதசுரக் கலைஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுவார். | 0 2<br><br>0 2 |
| 5.0 | நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார். | 5.1 இந்திய நடனங்களின் கலாசாரப் பின்னணியை ஆராய்ந்தறிவார். | • பரதநாட்டியம்<br>• இலங்கையில் பரதநாட்டியம் | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• பரத நாட்டியத்தின் தோற்றம் பற்றிக் குறிப்பிடுவார்.<br>• அந் நடனத்தில் இடம்பெறும் உருப்படிகளைக் கூறுவார்.<br>• இலங்கையில் நிலவிய நடனக்கலை பற்றி அறிந்து குறிப்பிடுவார்.<br>• தற்போதைய காலகட்டத்தில் நிலவும் பரதநாட்டியத்தை அறிந்து குறிப்பிடுவார். | 0 3 |

# பாடத்திட்டம்
# தரம் 8

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| | | 5.2 கிராமிய நடனங்களை அறிந்து கூறுவார். | • தொழில்சார் நடனம் | **இப்பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்**<br>• தொழில்சார் நடனம் எனும் பதத்தை விளங்கிக் கொள்வார்.<br>• தொழில்சார் நடனங்களைக் குறிப்பிடுவார். | 02 |
| | | | | | |

# முதலாம் தவணை

**தேர்ச்சி 1.0** : சூழலை இரசித்துத் தமது இரசனையை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : இயற்கைச் சூழலை இரசித்துத் தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு 1.1.1** : குரங்கு, மான், முயல், நரி, ஒட்டகம், பாம்பு ஆகிய விலங்குகளின் அசைவுகளை அவதானித்து நயந்தவற்றை வெளிப்படுத்துவோம்.

**பாட வேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** : குரங்கு, மான், முயல், நரி, ஒட்டகம், பாம்பு ஆகிய விலங்குகளின் செயற்பாடுகள் அடங்கிய இறுவட்டுக்கள்.

**கற்றற் பேறுகள்** :

- விலங்குகளின் சுபாவ வேறுபாடுகளைப் பிரித்தறிந்து குறிப்பிடுவார்.
- விலங்குகளின் அசைவுகளை இரசித்து, இரசித்தவற்றை அபிநயித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ விலங்குகளின் செயற்பாடுகள் சம்பந்தமான ஒளிப்பதிவு செய்யப்பட்ட இறுவட்டைப் பார்வையிடச் செய்தல்
- ♦ பார்வையிடப்பட்ட விலங்குகளின் அசைவுகளை மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
  - விலங்குகளின் அசைவுகள்.
  - குரங்கு, மான், முயல், நரி, ஒட்டகம், பாம்பு ஆகிய விலங்குகளின் செயற்பாடுகள் அடங்கிய காணொளி (உ+ம்) குரங்குகளின் சேஷ்டைகள்.
- ♦ அவதானித்தவற்றை அடிப்படையாகக் கொண்டு அசைவுகளை மேற்கொள்ளுதல்.
- ♦ குழுவாக அபிநயிக்க வழிகாட்டல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

- விலங்குகளின் செயற்பாடுகளை நுட்பமாக அவதானிக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவார்.
- விலங்குகளின் செயற்பாடுகளை நயந்து வெளிப்படுத்துவார்.
- அவற்றைப் போல் அபிநயித்துக் காட்டுவார்.
- விலங்குகளின் செயற்பாடுகளை ஒன்றிணைத்து நடனத்தினூடாகக் காட்சியமைப்பை உருவாக்குவார்.

**தேர்ச்சி 2.0** : சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றையும், வெவ்வேறு வகையான பாடல்களையும், கோர்வைகளையும் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்2.1** : இயற்கைச் சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றைப் பாவனை செய்து காட்டுவார்.

**செயற்பாடு 2.1.1** : குரங்கு, மான், முயல், நரி, ஒட்டகம், பாம்பு ஆகிய விலங்குகளின் அசைவுகளைப் பாவனை செய்வோம்.

**பாடவேளைகள்** : 04

**தர உள்ளீடுகள்** : குரங்கு, மான், முயல், நரி, ஒட்டகம், பாம்பு ஆகிய விலங்குகளின் செயற்பாடுகள் அடங்கிய காணொளி இறுவட்டு.

**கற்றற் பேறுகள்** :

- விலங்குகளின் சுபாவத்தினைக் கூறுவார்.
- விலங்குகளின் அசைவுகளைப் பாவனை மூலம் முன்வைப்பார்.
- குரங்கு, மான், முயல், நரி, ஒட்டகம், பாம்பு ஆகிய விலங்குகளின் செயற்பாடுகளைச் சித்தரிப்பதற்குரிய ஆக்கத்திறனை வெளிப்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

- ♦ ஏற்கெனவே வகுப்பில் கற்று இரசித்து, அபிநயித்துக் காட்டிய இயற்கைச் சூழல் சம்பந்தமான விடயங்களைப் பற்றி நினைவு கூருதல்.
- ♦ குரங்கு, மான், முயல், நரி, ஒட்டகம், பாம்பு ஆகிய விலங்குகளின் செயற்பாடுகள் அடங்கிய காணொளி இறுவட்டினைப் பார்வையிடச் செய்தல்.
- ♦ பார்வையிட்ட விடயங்களைக் கொண்டு கீழ்வரும் விடயங்களை அபிநயிக்க வழிப்படுத்தல்.
  - குரங்கு, மான், முயல், நரி, ஒட்டகம், பாம்பு ஆகிய விலங்குகளின் செயற்பாடுகள்.
  - விலங்குகளின் சிறப்பான அன்றேல் தனித்துவமான செயற்பாடுகளைப் பாவனை செய்தல்.
  - ஒரு காட்டில் மேற்கூறப்பட்ட விலங்குகள் ஒன்றாக வசிப்பதைக் கதையுருவில் சித்தரித்துப் பாவனை செய்தல்.
- ♦ மாணவர்களைத் தொகைக்கேற்பக் குழுக்களாகப் பிரித்து, விலங்குகளின் அசைவுகளைப் பாவனை செய்யும்படி கூறுதல்.
- ♦ மாணவர்கள் குழுக்களாக அபிநயிக்கும் போது ஆசிரியர் அவதானித்து நெறிப்படுத்துதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

- ♦ குரங்கு, மான், முயல், நரி, ஒட்டகம், பாம்பு ஆகிய விலங்குகளின் செயற்பாடுகளைப் பாவனை செய்வார்.
- ♦ விலங்குகளின் சிறப்பான அன்றேல் தனித்துவமான செயற்பாடுகளைக் கண்டறிவார்.
- ♦ ஒரு காட்டில் மேற்கூறப்பட்ட விலங்குகள் ஒன்றாக வசிப்பதைக் கதையுருவில் புனைந்து காட்சியமைப்பை மேற்கொள்வார்.

**தேர்ச்சி 3.0 :** பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்களையும் ஜாதி ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பரத நாட்டியத்திற்குரிய முத்திரைகளின் விநியோகங்களை அபிநயிப்பார்.

**செயற்பாடு 3.1.1 :** முஷ்டி - கபித்தம் வரையான முத்திரை விநியோகங்களை உச்சரிப்புப் பிழையின்றிக் கூறி அபிநயித்துக் காட்டுவோம்.

**பாட வேளைகள் :** 03

**தர உள்ளீடுகள் :** முஷ்டி - கபித்தம் வரையான முத்திரை விநியோகங்கள் எழுதப்பட்ட அட்டை, விநியோகங்கள் அபிநயிக்கப்பட்ட காணொளி இறுவட்டு.

**கற்றற் பேறுகள் :**

- ஒரு கையினாற் செய்யப்படுவது ஒற்றைக் கை முத்திரை என்பதை அறிந்து கூறுவார்.
- முஷ்டி - கபித்தம் வரையான முத்திரைகளின் விநியோகங்களைத் தெளிவுபட உச்சரிப்பார்.
- அவற்றின் பொருள் கூறுவார்.
- அவற்றை அபிநயிப்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

- முன்பு கற்ற ஒற்றைக்கை முத்திரைகள் தொடர்பான விடயங்களையும் விநியோகங்களையும் தொடர்புபடுத்திக் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.
- சுகதுண்ட விநியோகத்தை அபிநயித்தல்.
- முஷ்டி - கபித்தம் வரையான முத்திரை விநியோகங்கள் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- இறுவட்டினைப் பார்வையிடச் செய்தல்.
- ஆசிரியர் விநியோகத்தினைக் கூற மாணவர் பின்பற்றிக் கூறல்.
- இறுவட்டு உச்சரிப்புடன் இணைந்து மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கவும்.
- முத்திரை விநியோகப் பிரயோகங்களை அபிநயிக்க வழிப்படுத்தவும்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி ஒரு குழுவின் முன்வைப்பின் போது மற்றைய குழு விமர்சனங்களை முன்வைக்க இடமளித்தல்.

- மாணவர்களின் குறை, நிறைகளைச் சுட்டிக் காட்டித் தேவையெனின் மேலதிக பயிற்சியை வழங்குதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

- முஷ்டி - கபித்தம் வரையான விநியோகங்களைச் சரியான உச்சரிப்புடன் முழுமையாக அபிநயிப்பார்.

- அவற்றின் கருத்துக்களைக் கூறுவார்.

**தேர்ச்சி 3.0 :** பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்களையும் ஜாதி ஹஸ்தங்களையும் ், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2 :** ஹஸ்தங்களையும் பேதங்களையும் அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.2.1 :** சிரோ, பாத பேதங்களை அபிநயிப்போம்.

**பாட வேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :** சிரோ, பாத பேதங்கள் எழுதப்பட்ட அட்டை.

**கற்றற் பேறுகள் :**

- சிரோ பேதம் என்றால் தலை அசைவுகள் என்பதைக் கூறுவார்.
- சிரோ பேதங்களை அபிநயித்துக் காட்டுவார்.
- பாத பேதம் என்றால் பாதங்களின் அசைவுகள் என்பதைக் கூறுவார்.
- பாத பேதங்களை அபிநயித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- சிரோ, பாத பேதங்கள் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- ஆசிரியர் சிரோபேதங்களைக் கூறி அவற்றின் செயற்பாட்டை அபிநயித்தலும் மாணவர் பின்பற்றி அபிநயித்தலும்.
- ஆசிரியர் பாதபேதங்களைக் கூறி அவற்றின் செயற்பாட்டை அபிநயித்தலும் மாணவர் பின்பற்றி அபிநயித்தலும்.
- அவற்றின் விநியோகங்கள் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- மாணவர் குறிப்பெடுத்தல்.
- மாணவர்களைத் தனித்தனியாகச் சிரோபேதங்களை அபிநயிக்கச் செய்தல்.
- மாணவர்களைத் தனித்தனியாகப் பாதபேதங்களை அபிநயிக்கச் செய்தல்.
- முழுமையாகச் சிரோபேதங்களை அபிநயிப்பதற்கு வழிப்படுத்தல்.
- முழுமையாகச் பாதபேதங்களை அபிநயிப்பதற்கு வழிப்படுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

- சிரோ பேதங்களின் எண்ணிக்கையைக் கூறுவார்.
- சிரோ பேதம் என்றால் தலை அசைவுகள் என்பதைக் கூறுவார்.
- சிரோ பேதங்களை அபிநயித்துக் காட்டுவார்.
- பாத பேதங்களின் எண்ணிக்கையைக் கூறுவார்.
- பாத பேதம் என்றால் பாதங்களின் அசைவுகள் என்பதைக் கூறுவார்.
- பாத பேதங்களை அபிநயித்துக் காட்டுவார்.
- விநியோகங்களைக் கூறுவார்.

**தேர்ச்சி 3.0 :** பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3 :** பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளை அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.3.1 :** தெய்யா தெய்யி அடவுகளைத் திரிகாலங்களிலும் அபிநயிப்போம்.(1-4)

**பாட வேளைகள் :** 08

**தர உள்ளீடுகள் :** தெய்யா தெய்யி அடவின் கோட்டுச் சித்திரம் (பாத நிலைகளுக்கான வரைபடங்கள்)

**கற்றற் பேறுகள் :**

- தெய்யா தெய்யி அடவுகளைத் திரிகாலங்களிலும் அபிநயிப்பார்.
- அவற்றைத் திரிகாலங்களிலும் கொலுப்பித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- தெய்யா தெய்யி அடவுகள் ஆதி தாளத்தில் இடம்பெறும் எனக் கூறுதல்.
- நான்கு வகை அடவுகள் உண்டு.
- பாதநிலை, அங்கநிலை பற்றி மாணவருடன் கலந்துரையாடி வகுப்பை ஆரம்பித்தல்.
- அடவின் கோட்டுச் சித்திரத்தைக் காட்சிப்படுத்தல்.
- பாவிக்கப்படும் முத்திரைகள்.
- அரைமண்டியில் இருத்தல், கால்களை மடித்துத் தட்டுதல் போன்ற ஆரம்பப் பயிற்சிகளை ஆசிரியர் செய்து காட்டுவதுடன் அவற்றை மாணவர் அவதானித்துஅபிநயித்தல்.
- அடவுப் பயிற்சியின் போது பின்வரும் அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

  - தெய்யியிற்கு காலைச் சம பாதமாக விழுத்தும் போது இரண்டு கால்களும் சேர்ந்த நிலையில் இருக்க வேண்டும்.

  - முதலாவது தெய்யா தெய்யி அடவு வலது பக்கத்திற்குச் செய்து திரும்ப இடது பக்கத்திற்கு ஆரம்பிக்கும் போது கால்கள் அரை மண்டி நிலையிலிருந்து ஆரம்பிப்பதை உறுதி செய்யவும்.

  - அடவுகள் 2ஆவது, 3ஆவது, 4ஆவதைச் சமபாதத்தில் நின்று செய்யப் பயிற்சியளித்தல்.

- 2ஆவது, 4ஆவது அடவுகளுக்குப் பக்கவாட்டில் அசையும் பயிற்சியளித்தல்.

- 3ஆவது அடவிற்கு முன்பக்கமாக அசையும் பயிற்சியளித்தல்.

- 1 - 4 அடவுகளையும் திரிகாலங்களில் பயிற்சிசெய்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

- தெய்யா தெய்யி அடவின் முழுமையான விபரங்களை முன்வைப்பார்.
- தெய்யா தெய்யி அடவுகளைத் திரிகாலங்களிலும் அபிநயிப்பார்.
- அவற்றைத் திரிகாலங்களிலும் கொலுப்பித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் , எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : அபிநயத்தின் வகைகளை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.1.1** : அபிநயத்தின் நான்கு வகைகளையும் அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 01

**தரஉள்ளீடுகள்** : அபிநயத்தின் நான்கு வகைகளையும் விளக்கும் விளக்கப் படம்.

**கற்றற் பேறுகள்** :

- நான்குவித அபிநயங்களையும் குறிப்பிடுவார்.
- ஆங்கிக, வாச்சிக, ஆஹார்ய, சாத்விக எனும் பதங்களைத் தியான ஸ்லோகத்துடன் தொடர்புபடுத்துவார்.
- ஆங்கிக, வாச்சிக, ஆஹார்ய, சாத்விக அபிநயம் ஆகியவற்றின் எண்ணக்கரு விளக்கத்தைக் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**:

- அபிநயம் என்றால் என்ன என்பது தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- அபிநயத்தை எவ்வாறெல்லாம் வெளிப்படுத்த முடியும் என்பதை உதாரணங்களுடன் தெளிவுபடுத்தல்.
- ஆங்கிக, வாச்சிக, ஆஹார்ய, சாத்விக எனும் பதங்களை தியான ஸ்லோகத்துடன் தொடர்புபடுத்தி விளக்கிக் கூறுதல்.
- குறிப்புகளை வழங்குதல்.
- ஒவ்வொரு மாணவராலும் எழுதப்பட்ட குறிப்புக்களைப் படிக்கச்செய்து தவறவிட்ட விடயங்களை மீள வலியுறுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**:

- நான்குவித அபிநயங்களையும் குறிப்பிடுவார்.
- ஆங்கிக, வாச்சிக, ஆஹார்ய , சாத்விக எனும் பதங்களை தியான ஸ்லோகத்துடன் தொடர்புபடுத்தி விளங்கிக் கொள்வார்.
- ஆங்கிக, வாச்சிக, ஆஹார்ய , சாத்விக. அபிநயம் ஆகியவற்றின் எண்ணக்கரு விளக்கத்தைக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் , எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : அடவுகளுக்குரிய இசைக்குறியீடுகளைப் பிரயோகிப்பார்.

**செயற்பாடு 4.2.1** : தட்டடவினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுவோம். (1-8 வரை)

**பாட வேளைகள்** : 05

**தரஉள்ளீடுகள்** : தட்டடவு 1 - 8 வரை தாளங்கள் எழுதப்பட்ட அட்டை.

**கற்றற் பேறுகள்** :

- தட்டடவினை இசைக் குறியீட்டுடன் எழுதுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**:

- செய்முறை வகுப்பில் கொலுப்பித்த தட்டடவினைத் தாளத்துடன் கொலுப்பிக்கச் செய்தல்.
- தட்டடவு இசைக்குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டையினைக் காட்சிப்படுத்துதல்.
- ஒரு அட்சரத்திற்கு மாத்திரைகள் 4 என்பதைக் கூறுதல்.
- அவ்வாறே மத்திம துரித காலங்களிலும் மாத்திரைகள் மாறாது.
- மாணவர்கள் ஆதிதாளக் கணக்குகளை எழுதும்போது கவனிக்க வேண்டியவை.

1ஆம் காலம்
2ஆம் காலம் } 32 மாத்திரைகள்
3ஆம் காலம்

- சொற்கட்டுகள் இரட்டிப்படைந்தாலும் அட்சர எண்ணிக்கையோ மாத்திரைக் கணக்கோ மாறுபடாது.

**கணிப்பீடும் மதிப்பீடும்**:

- ஆதிதாளத்திற்குரிய தட்டடவுகளை இசைக்குறியீட்டுடன் எழுதுவார்.
- இதே போன்று ரூபகதாளத் தட்டடவுகளிற்கும் கீழ்க்கண்டவாறு எழுதப்படவேண்டும். (3ஆவது, 8ஆவது)
- ரூபகதாளத்தில் கொலுப்பித்த அடவினை ( $01_4$) ஒரு அட்சரத்திற்கு 4 மாத்திரைகள் வருமென்பதைக் கூறுதல்.
- மத்திம துரித காலங்களிலும் மாத்திரை மாறாது என்பதைக் கூறுதல்.
- மாணவர்கள் எழுதும்போது கவனிக்கவேண்டியவை.

1ஆம் காலம்
2ஆம் காலம் 24 மாத்திரைகள்
3ஆம் காலம்

முதலாம் காலத்தில் 1ஆவது, 2ஆவது அட்சரத்திற்கு வந்த சொற்கட்டுக்கள் இரண்டாம் காலத்தில் 1ஆவது அட்சரத்திற்கும் இரண்டாம் காலத்தில் 1ஆவது, 2ஆவது அட்சரத்திற்கு வந்த சொற்கட்டுக்கள் மூன்றாம் காலத்தில் முதலாவது அட்சரத்திற்கும் இடம்பெறும் என்பதை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தல். உதாரணத்திற்குக் கீழ்வரும் அட்டவணையைப் பின்பற்றவும்.

உதாரணம் - ஆதிதாளம் முதலாவது தட்டடவு

| 1$_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அசரம் | 7வது அட்சரம் | 8வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | | | |
| தெய்,யா | தெய்,; | தெய்,யா | தெய்,; / | தெய்,யா | தெய்,; / | தெய்,யா | தெய்,; // |
| **2ம் காலம்** | | | | | | | |
| தெய்ய<br>தெய், | தெய்ய<br>தெய், | தெய்ய<br>தெய், | தெய்ய<br>தெய்/ | தெய்ய<br>தெய், | தெய்ய<br>தெய்,/ | தெய்ய<br>தெய், | தெய்ய<br>தெய், // |
| **3ம் காலம்** | | | | | | | |
| தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய்/ | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் / | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் // |

இவ்வாறே ரூபகதாளத்தினையும் எழுதுவதற்குப் பயிற்சி அளிக்கவும்.

குறிப்பு : தரம் 6,7 இல் அடவுகளின் சொற்கட்டுக்கள் மாத்திரமே இசைக்குறியீட்டுடன் எழுதப்பட்டது. இத் தரத்திற்குக் கார்வைக் கணக்குகளுடன் இசைக் குறியீடு கற்பிக்கப்படவேண்டும்.

**தேர்ச்சி 4.0 :** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2 :** அடவுகளுக்குரிய இசைக்குறியீடுகளைப் பிரயோகிப்பார்.

**செயற்பாடு 4.2.2 :** நாட்டடவினையும் தெய்ஹத் தெய்ஹி அடவினையும் இசைக்குறியீட்டுடன் எழுதுவோம்.

**பாட வேளைகள் :** 01

**தர உள்ளீடுகள் :** நாட்டடவு, தெய்ஹத் தெய்ஹி அடவுகள் இசைக்குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டை

**கற்றற் பேறுகள் :**

- நாட்டடவினைத் தாளத்துடன் கொலுப்பிப்பார்.
- நாட்டடவினை இசைக்குறியீட்டுடன் எழுதுவார்.
- தெய்ஹத் தெய்ஹியினைத் தாளத்துடன் கொலுப்பிப்பார்.
- தெய்ஹத் தெய்ஹி அடவினை இசைக்குறியீட்டுடன் எழுதுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- தட்டடவிற்குப் பயன்படுத்திய கற்றல் கற்பித்தற் செயலொழுங்கை இங்கே பயன்படுத்தவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- நாட்டடவினைத் தாளத்துடன் கொலுப்பிப்பார்.
- நாட்டடவினை இசைக்குறியீட்டுடன் எழுதுவார்.
- தெய்ஹத் தெய்ஹியினைத் தாளத்துடன் கொலுப்பிப்பார்.
- தெய்ஹத் தெய்ஹி அடவினை இசைக்குறியீட்டுடன் எழுதுவார்.

**குறிப்பு :** தரம் 6, 7இல் வழங்கப்பட்ட இசைக் குறியீடானது கார்வைக் கணக்குகளுடன் வழங்கப்படாததால் தரம் 8இல் முழுமையாகக் கற்பிக்கப்பட வேண்டும்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : அடவுகளுக்குரிய இசைக்குறியீடுகளைப் பிரயோகிப்பார்.

**செயற்பாடு 4.2.3** : தாதெய் தெய்த, தெய்யா தெய்யி, ஆகிய அடவுகளை இசைக்குறியீட்டுடன் எழுதுவோம்.

**பாட வேளைகள்** : 01

**தர உள்ளீடுகள்** : தாதெய் தெய்த, தெய்யா தெய்யி, ஆகிய இரு அடவுகளும் இசைக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டைகள்.

**கற்றற் பேறுகள்** :

- தெய்யா தெய்யி, தாதெய் தெய்த அடவுகனைத் தாளத்துடன் கொலுப்பிப்பார்.
- அவற்றை இசைக்குறியீட்டுடன் எழுதுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- தட்டடவிற்குப் பயன்படுத்திய கற்றல் கற்பித்தற் செயலொழுங்கை இங்கே பயன்படுத்தவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- தாதெய் தெய்த, தெய்யா தெய்யி, அடவுகளைத் தாளத்துடன் கொலுப்பிப்பார்.
- அவற்றை இசைக்குறியீட்டுடன் எழுதுவார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3** : பரத நாட்டியத்தின் பொதுவான அம்சங்களை அறிவார்.

**செயற்பாடு 4.3.1** : சிரோபேதம், பாதபேதங்களை அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 01

**தர உள்ளீடுகள்** : சிரோபேதங்கள், பாத பேதங்கள் எழுதப்பட்ட அட்டை.

**கற்றற் பேறுகள்** :

- சிரம் என்றால் தலை என்பதைக் கூறுவார்.
- தலையினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் சிரோ பேதங்கள் என்பதைத் தீர்மானிப்பார்.
- சிரோ பேதங்களின் எண்ணிக்கையைக் கூறுவார்.
- அவற்றைப் பட்டியற்படுத்துவார்.
- பாத பேதங்களின் எண்ணிக்கையைக் கூறுவார்.
- பாத பேதங்களைப் பட்டியற்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- மாணவர்களுடன் தலையை எவ்வாறெல்லாம் அசைக்கலாம் என வினவி அவர்களின் எண்ணங்களை வெளிக்கொணரல்.
- அவர்கள் கூறும் விடைகளைக்கொண்டு அதற்குரிய சாஸ்திரியப் பெயர்களை ஆசிரியர் கூறி மாணவர்களை உற்சாகப்படுத்தல்.
- அதன்பின் அட்டவணையை வழங்கி எழுதப்பணித்தல்.
- அவ்வாறே பிரதானமான பாதங்களின் அசைவுகள் நான்கு என்பதைக் கூறி அவற்றினையும் வழங்குதல்.
- மாணவர்களால் எழுதப்பட்ட குறிப்புக்களைப் பார்வையிட்டு உறுதிப்படுத்தவும்.

**கணிப்பீடும மதிப்பீடும்**

- சிரோபேதங்களின் எண்ணிக்கையைக் கூறுவார்.
- விநியோகங்களைக் கூறுவார்.
- பாதபேதங்களின் எண்ணிக்கையைக் கூறுவார்.

**குறிப்பு** : அடிப்படையான 4 பாத பேதங்களை மட்டும் வழங்கவும்.

**தேர்ச்சி 5.0** : நடனங்களின் கலாசார, பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 5.2** : கிராமிய நடனங்களை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 5.2.1** : தொழில்சார் நடனங்களைப் பற்றி அறிவோம்.

**பாட வேளைகள்** : 02

**தரஉள்ளீடு** : தொழில்சார் நடனங்களின் பிரிவுகள் எழுதப்பட்ட அட்டைகள், படங்கள், காணொளி இறுவட்டு

**கற்றற் பேறுகள்** :

- கிராம மக்களின் பண்புசார் விழுமியங்களைக் கூறுவார்.
- கிராமிய மக்கள் சந்தர்ப்பங்களுக்கேற்ப வெளிப்படுத்தும் கலாசார ஆக்கங்களைக் குறிப்பிடுவார்.
- கிராமியக் கலைகள் மக்கள் வாழ்க்கையோடு பிணைந்துள்ளதை வெளிப்படுத்துவார்.
- தொழில்சார் நடனம் எனும் பதத்தை விளக்குவார்.
- தொழில்சார் நடனங்களைக் குறிப்பிடுவார்.
- அவை தொழிலைச் சித்தரிக்குமாற்றை விளக்குவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு** :

- தர உள்ளீடுகளைக் காட்சிப்படுத்துதல்.
- பார்வையிட்ட விடயங்கள் தொடர்பாகவும், மாணவர் ஏற்கெனவே பெற்ற அனுபவங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடுதல்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

    - மக்களின் தொழில் முறை.
    - பயன்படுத்தப்படும் உபகரணங்கள்.
    - தொழிலுடனான வாழ்வியல் பின்னணி.
    - தொழில்சார் நடனங்கள் - அரிவிவெட்டு, மீனவ நடனம், தேயிலைக் கொழுந்து நடனம்.
    - தொழிலைச் சித்திரித்து ஆடும் நடனம் தொழில்சார் நடனம் ஆகும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- கிராமிய மக்களின் பண்புசார் விழுமியங்களைக் கூறுவார்.
- கிராமிய மக்கள் சந்தர்ப்பங்களுக்கேற்ப வெளிப்படுத்தும் கலாசார ஆக்கங்களைக் குறிப்பிடுவார்.
- கிராமியக் கலைகள் மக்கள் வாழ்க்கையோடு பிணைந்துள்ளதை வெளிப்படுத்துவார்.
- தொழில்சார் நடனம் எனும் பதத்தை விளக்குவார்.
- தொழில்சார் நடனங்களைக் குறிப்பிடுவார்.
- அவை தொழிலைச் சித்தரிக்குமாற்றை விளக்குவார்.

# இரண்டாம் தவணை

**தேர்ச்சி 1.0** : சூழலை இரசித்துத் தமது இரசனையை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : கிராமிய நடனங்களை நயந்து வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு 1.2.1** : வேப்பிலை நடனத்தை நயந்து வெளிப்படுத்துவோம்.

**பாட வேளைகள்** : 01

**தர உள்ளீடுகள்** : வேப்பிலை நடனம் அடங்கிய காணொளி, இறுவட்டு

**கற்றற் பேறுகள்** :

- வேப்பிலை நடனத்திற்குரிய வாத்தியங்களைக் குறிப்பிடுவார்.
- வேப்பிலை நடனத்திற்கு அணியப்படும் ஆடை, அணிகலன்களின் பொருத்தப்பாட்டினை வெளிப்படுத்துவார்.
- வேப்பிலை நடனப் பாடல் அம்மன் மீது பாடப்படுவதை ஏற்பார்.
- இது ஒரு பக்திசார்பான நடனம் என்பதைக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு** :

♦ ஏற்கெனவே பார்வையிட்ட வேப்பிலை நடனம் பற்றிக் கலந்துரையாடுதல்.

♦ வேப்பிலை நடனம் அடங்கிய இறுவட்டினை வகுப்பில் காண்பித்துப் பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடுதல்.

- வேப்பிலை நடனத்தின் பக்கவாத்தியங்கள் .
- வேப்பிலை நடன இசைக்கு இயல்பான உரு ஆட்டத்தை ஏற்படுத்தும் தன்மை.
- இந்த நடனப் பாடல் எளிய முறையில் எல்லா மக்களாலும் பாடவும், இரசிக்கவும் கூடிய வகையில் அமைந்துள்ளமை.
- அணியப்படும் ஆடை அலங்காரங்கள்.
- தெய்வீக உணர்வை ஏற்படுத்தல்.

♦ மாணவரின் சுய ஆக்கமாக இருக்க வேண்டும். வழிகாட்டல் மட்டுமே ஆசிரியரால் வழங்கப்பட வேண்டும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**:

- வேப்பிலை நடனத்திற்குப் பயன்படுத்தப்படும் வாத்தியங்களைப் பட்டியற்படுத்துவார்.
- வேப்பிலை நடனத்திற் பயன்படுத்தப்பட்ட பாடலைப் பாடிக் காட்டுவார்.
- இந் நடனங்களிற்குப் பயன்படுத்தப்படும் ஆடை அணிகலன்களின் பொருத்தப்பாட்டினைக் கூறுவார்.
- வேப்பிலை நடனப் பாடல் அம்மன் மீது பாடப்படுவதை ஏற்பார்.
- இது ஒரு பக்திசார்பான நடனம் என்பதைக் கூறுவார்.

**தேர்ச்சி 2.0** : சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றையும், வெவ்வேறு வகையான பாடல்களையும், கோர்வைகளையும் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 2.3** : கிராமியப் பாடல்களுக்குத் தாமே அபிநயம் அமைத்துக் கொலுப்பித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 2.3.1** : வேப்பிலை நடனம் ஒன்றினை அமைத்து ஆற்றுகைப்படுத்துவோம்.

**பாட வேளைகள்** : 02

**தர உள்ளீடு** : பாடல் எழுதப்பட்ட அட்டை, ஒலிப்பதிவுக் கருவி, ஒலிப்பதிவு நாடா இறுவட்டு, தட்டுக்கழி, தட்டுப்பலகை

**கற்றற் பேறுகள்** :

- வேப்பிலை நடனப் பாடலைத் தாளத்துடன் பாடுவார்.
- அம்மனை வேண்டி ஆடப்படுவது வேப்பிலை நடனம் என்பதை அறிவார்.
- பாடலுக்கேற்பத் தாமே அபிநயம் அமைப்பார்.
- நடனச் சுவடுகளைக் கிராமியப் பாங்குடன் ஆடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**:

- பாடலை முன்வைத்தல்.
- மாணவர் அவதானித்துப் பாடுதல்.
- பாடலின் பொருளுக்கேற்ப முத்திரைகளைப் பிரயோகிக்கவும், அபிநயிக்கவும் வழிகாட்டல்.
- மாணவரின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும். வழிகாட்டல் மட்டுமே வழங்க வேண்டும்.
- மாணவர்களை எண்ணிக்கைக்கேற்பக் குழுக்களாகப் பிரித்துப் பயிற்சியிலீடுபடச் செயதல்.
- பயிற்சியில் மாணவர் ஈடுபடும் போது தேவையெனில் அறிவுறுத்தல்களை வழங்குதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**:

- அம்மனை வேண்டி ஆடப்படுவது வேப்பிலை நடனம் என்பதை அறிவார்.
- வேப்பிலை நடனப் பாடலைத் தாளத்துடன் பாடுவார்.
- நடனச் சுவடுகளைக் கிராமியப் பாங்குடன் ஆடுவார்.
- ஏனைய குழுவினரின் ஆடல் பற்றிய விமர்சனத்தினை முன்வைப்பார்.

**தேர்ச்சி 3.0 :** பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்களையும் ஹஸ்தங்களையும், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பரத நாட்டியத்திற்குரிய முத்திரைகளின் விநியோகங்களை அபிநயிப்பார்.

**செயற்பாடு 3.1.2 :** கடகாமுகம் - பத்மகோஷம் வரையான முத்திரை விநியோகங்களை உச்சரிப்புப் பிழையின்றிக் கூறி அபிநயித்துக் காட்டுவோம்.

**பாட வேளைகள் :** 04

**தர உள்ளீடுகள் :** ஒற்றைக்கை முத்திரை விநியோகங்கள் அடங்கிய படஅட்டை, காணொளி இறுவட்டு.

**கற்றற் பேறுகள் :**

- கடகாமுகம் - பத்மகோஷம் வரையான முத்திரை விநியோகங்களைத் தெளிவுபட உச்சரித்துக் காட்டுவார்.
- அவற்றின் பொருள் கூறுவார்.
- அவற்றை அபிநயித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

- முன்பு கற்ற ஒற்றைக்கை முத்திரை விநியோகங்கள் தொடர்பான விடயங்களை மீட்டல் செய்தல்.
- கடகாமுகம் - பத்மகோஷம் வரையான முத்திரை விநியோகங்களைச் சமஸ்கிருத உச்சரிப்பில் கூறுதல்.
- அவற்றின் கருத்தைக் கூறுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- ஒற்றைக் கை முத்திரை என்றால் என்ன என்பதைக் கூறுவார்.
- அதன் எண்ணிக்கையைக் கூறுவார்.
- கடகாமுகம் - பத்மகோஷம் வரையான முத்திரை விநியோகங்களைச் சரியான உச்சரிப்புடன் முழுமையாக அபிநயித்துக் காட்டுவார்.
- அவற்றின் கருத்துக்களைக் கூறுவார்.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்களையும் ஜாதி ஹஸ்தங்களையும், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : ஹஸ்தங்களையும் பேதங்களையும் அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.2.2** : திருஸ்டி, கண்ட பேதங்களை அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 03

**தர உள்ளீடுகள்** : திருஸ்டி, கண்ட பேதங்கள் எழுதப்பட்ட அட்டை.

**கற்றற் பேறுகள்** :

- திருஸ்டி பேதங்களின் எண்ணிக்கையைக் கூறுவார்.
- திருஸ்டி பேதங்களை அபிநயித்துக் காட்டுவார்.
- திருஸ்டி என்றால் கண் என்பதைக் கூறுவார்.
- கண்ட பேதங்களைக் கூறுவார்.
- கண்ட பேதங்களை அபிநயித்துக்காட்டுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- திருஸ்டி, கண்ட பேதங்கள் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி அவற்றின் உதவியுடனும் ஏற்கெனவே அறிமுறைப் பாடத்தில் கற்றுக் கொண்டவைகளையும் அடிப்படையாகக் கொண்டு செயன்முறைப் பாடத்தைத் திட்டமிடவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

- திருஷ்டி, கண்ட பேதங்களின் எண்ணிக்கையைக் கூறுவார்.
- திருஸ்டி, கண்ட பேதங்களை அபிநயிப்பார்.
- திருஸ்டி என்றால் கண் என்பதைக் கூறுவார்.
- திருஷ்டி பேதங்களின் விநியோகங்களைக் கூறுவார்.
- கண்ட பேதங்களைக் கூறுவார்.
- கண்ட பேதங்களின் விநியோகங்களைக் கூறுவார்.

.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்களையும் ஜாதி ஹஸ்தங்களையும், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3** : பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளை அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.3.2** : தத் தெய் தாம் ( 1- 3) திரி காலங்களிலும் ஆடுவோம்.

**பாட வேளைகள்** : 08

**தர உள்ளீடுகள்** : பாத நிலைகளுக்கான வரைபடங்கள், தட்டுக்கழி, தட்டுப்பலகை.

**கற்றற் பேறுகள்** :

- தத் தெய் தாம் அடவுகளின் எண்ணிக்கையைக் கூறுவார்.
- தத் தெய் தாம் அடவுகளை (1-3) அபிநயிப்பார்.
- அவற்றைக் கொலுப்பித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு** :

- தத் தெய் தாம் அடவுகள் அனைத்தும் ஆதி தாளத்தில் இடம்பெறும் .
- 1 - 3 வரையிலான அடவுகளிற்குப் பாவிக்கப்படும் முத்திரைகளை அட்டவணைப்படுத்தல்.
- ஏனைய அடவுகளுக்குரிய கற்பித்தல் முறையினை இங்கே பின்பற்றவும்.
- ஒவ்வொரு அடவினதும் காற்செய்கையைத் திரிகாலத்திற் பயிற்சியளித்துப் பின்னர் கைச்செய்கையைப் பயிற்சி அளிக்கவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

- தத் தெய் தாம் அடவுகளின் எண்ணிக்கையைக் கூறுவார்.
- தத் தெய் தாம் அடவுகளைத் திரிகாலங்களிலும் அபிநயித்துக் காட்டுவார்.
- அவற்றைத் திரிகாலங்களிலும் கொலுப்பித்துக் காட்டுவார்.
- பயன்படுத்தப்படும் முத்திரைகளைக் கூறுவார்.

**தேர்ச்சி 3.0** : பரதநாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும் அடவுகளையும் அங்கபேதங்களையும் பரதநாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக்காட்டுவர்.

**தேர்ச்சி மட்டம் 3.0** : பரதநாட்டியத்தின் அடிப்படை அடவுகளை அபிநயித்துக்காட்டுவார்.

**செயற்பாடு 3.3.3** : 1ஆவது தத்தெய் தாஹா அடவினை அபிநயிப்போம்.

**பாடவேளை** : 06

**தர உள்ளீடுகள்** : தத்தெய்தாஹா அடவிற்குரிய கோட்டுச்சித்திரங்கள்

**கற்றற்பேறுகள்** :

- தத்தெய் தாஹா அடவிற்குரிய முழுமையான விளக்கத்தைக் கூறுவார்.
- 1ஆவது தத்தெய் தாஹா அடவினை அபிநயிப்பார்.
- தாளத்துடன் கொலுப்பித்துக் காட்டுவார்.
- 1ஆவது தத்தெய் தாஹா ரூபக தாளத்தில் அமைந்துள்ளது என்பதைக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

- தத்தெய் தாஹா அடவுகளில் 1ஆவது ரூபகதாளத்திலும் ஏனையவை ஆதி தாளத்திலும் இடம்பெறும்.
- தத்தெய் தாஹா அனைத்திலும் திரிபதாக முத்திரை மாத்திரம் பயன்படுத்தப்படும்.
- 1ஆவது தத்தெய் தாஹா காற் செய்கையினை 3 காலங்களிலும் பயிற்சி அளிக்கவும்.
- தத்தெய் தாஹாவின் பிற்பகுதியான குதித்து மெட்டுதலைத் தனியாகப் பயிற்சி அளிக்கவும்.
- கைச்செய்கையைப் பயிற்சி அளித்துக் காற்செய்கையுடன் இணைக்கவும்.
- முதலாவது தத்தெய் தாஹாவில் தத்திற்கு வலது கைப் பக்கம் செல்லும்போது இடது கை திரிபதாகம் எந்தவித அசைவுமின்றி அப்படியே இருக்கவேண்டும் என்பது பிரதானமாகக் கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- தத்தெய் தாஹா அடவுகளின் எண்ணிக்கையைக் கூறுவார்.
- தத்தெய் தாஹா அடவுகளைத் திரிகாலங்களிலும் அபிநயித்துக் காட்டுவார்.
- அவற்றைத் திரிகாலங்களிலும் கொலுப்பித்துக் காட்டுவார்.
- பயன்படுத்தப்படும் முத்திரைகளைக் கூறுவார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : அடவுகளுக்குரிய இசைக்குறியீடுகளைப் பிரயோகிப்பார்.

**செயற்பாடு 4.2.4** : தத்தெய் தாம் அடவினை இசைக்குறியீட்டுடன் எழுதுவோம்.

**பாட வேளைகள்** : 01

**தர உள்ளீடுகள்** : தத்தெய்தாம் அடவு இசைக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டை

**கற்றற் பேறுகள்** :

- தத்தெய் தாம் அடவினைத் தாளத்துடன் கொலுப்பிப்பார்.
- தத்தெய் தாம் அடவினை இசைக்குறியீட்டுடன் எழுதுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- முன்னர் அடவுகளிற்குப் பயன்படுத்திய கற்றல் கற்பித்தற்

  செயலொழுங்கை இங்கே பயன்படுத்தவும்.

- **கணிப்பீடும் மதிப்பீடும்**

- தத்தெய் தாம் அடவினைத் தாளத்துடன் கொலுப்பிப்பார்.
- தத்தெய் தாம் அடவினை இசைக்குறியீட்டுடன் எழுதுவார்.

**குறிப்பு** : இசைக்குறியீடானது கார்வைக் கணக்குகளுடன் விரிவாகக் கற்பிக்கப்படல் வேண்டும்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3** : பரதநாட்டியத்தின் பொதுவான அம்சங்களை அறிவார்.

**செயற்பாடு 4.3.2** : திருஸ்டி பேதம், கண்ட பேதங்களை அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 01

**தர உள்ளீடுகள்** : திருஸ்டி, கண்ட பேதங்கள் எழுதப்பட்ட அட்டை.

**கற்றற் பேறுகள்** :

- திருஸ்டி என்றால் கண் என்பதைக் கூறுவார்.
- கண்களினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் திருஸ்டி பேதங்கள் என்பதைத் தீர்மானிப்பர்.
- திருஸ்டி பேதங்களின் எண்ணிக்கையைக் கூறுவார்.
- அவற்றைப் பட்டியற்படுத்துவார்.
- கிரிவா பேதம் என்றால் கழுத்தின் அசைவு என்பதைக் கூறுவார்.
- கிரிவா பேதத்தின் எண்ணிக்கையைக் கூறுவார்.
- அவற்றைப் பட்டியற்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- திருஸ்டி, கிரிவா பேதங்கள் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- விநியோகங்களை அறிவார்.
- குறிப்பெடுப்பார்

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

- திருஸ்டி, கிரிவா பேதங்களின் எண்ணிக்கையைக் கூறுவார்.
- திருஸ்டி, கிரிவா பேதங்களை அறிந்திருப்பார்.
- திருஸ்டி என்றால் கண் என்பதைக் கூறுவார்.
- கிரிவா என்றால் கழுத்து என்பதைக் கூறுவார்.
- திருஸ்டிபேதங்களின் விநியோகங்களைக் கூறுவார்.
- கிரிவா பேதங்களின் விநியோகங்களைக் கூறுவார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3** : பரத நாட்டியத்தின் பொதுவான அம்சங்களை அறிவார்.

**செயற்பாடு 4.3.3** : பாத்திர, அபாத்திர இலட்சணங்களையும் அரங்க தேவதாஸ்துதியையும் அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** : பாத்திர, அபாத்திர இலட்சணங்கள், அரங்கதேவதாஸ்துதி எழுதப்பட்ட அட்டை.

**கற்றற் பேறுகள்** :

- பாத்திர இலட்சணம் என்பது நாட்டியப் பெண்ணிற்கு இருக்கவேண்டிய இலட்சணம் என்பதைக் கூறுவார்.
- அபாத்திர இலட்சணம் என்பது நாட்டியப் பெண்ணிற்கு இருக்கக்கூடாத இலட்சணம் என்பதைக் கூறுவார்.
- ஆடலுக்கு முன் அரங்க தேவதையை வணங்க வேண்டும் என்பதை அறிந்து கொள்வார்.
- அரங்கதேவதாஸ்துதியைக் கூறுவார்.

**கற்றற் கற்பித்தற் செயலொழுங்கு** :

- பாத்திர, அபாத்திர இலட்சணம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- பாத்திர இலட்சணம் தொடர்பாகக் கலந்துரையாடல்.
- அபாத்திர இலட்சணம் தொடர்பாகக் கலந்துரையாடல்.
- சபை வணக்கம் தொடர்பாகக் கலந்துரையாடி முதலில் அரங்கதேவதையை வணங்க வேண்டும் என்பதைக் கூறுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- பாத்திர இலட்சணங்களைக் கூறுவார்.
- அபாத்திர இலட்சணங்களைக் கூறுவார்.
- அரங்கதேவதாஸ்துதியைக் கூறுவார்.

**தேர்ச்சி 5.0** : நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.

**தேர்ச்சிமட்டம் 5.1** : இந்திய நடனத்தின் கலாசாரப் பின்னணியை அறிவார்.

**செயற்பாடு 5.1.1** : தமிழகத்தின் சாஸ்திரிய நடனமான பரதநாட்டியத்தைப் பற்றி அறிவோம்.

**பாட வேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** : காணொளி, இறுவட்டு, பரதநாட்டியப் படங்கள், சுருக்கக் குறிப்புகள்.

**கற்றற் பேறுகள்** :

- பரத நாட்டியத்தின் தோற்றம் பற்றிக் குறிப்பிடுவார்.
- அந் நடனத்தில் இடம்பெறும் உருப்படிகளைக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு** :

- படங்களைக் காட்சிப்படுத்தல்.
- காணொளி இறுவட்டினைக் காட்சிப்படுத்தல்.
- உருப்படிகள் பற்றிக் குறிப்பிடுதல்.
- உருப்படிகளை இனங்காணல்.
- சுருக்கக் குறிப்பெடுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

- பரதநாட்டியம் பற்றி அறிந்து குறிப்பிடுவார்.
- உருப்படிகளை இனங்கண்டு குறிப்பிடுவார்.

# மூன்றாம் தவணை

**தேர்ச்சி 1.0** : சூழலை இரசித்து தமது இரசனையை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.3** : கதைப்பாடலை நயந்து ளிப்படுத்துவார்.

**செயற்பாடு 1.3.1** : கடற்கரைக் காட்சியை நயந்து ஆற்றுகையை முன்வைப்போம்.

**பாட வேளைகள்** : 01

**தர உள்ளீடுகள்** : கடற்கரைக் காட்சி உள்ளடங்கிய காணொளி இறுவட்டு

**கற்றற் பேறுகள்** :

- கடற்கரையில் இடம்பெறும் இயற்கை நிகழ்வுகளை ரசிப்பார்.
- இந்நிகழ்வுகளை மையமாகக் கொண்டு குழு நடனம் ஒன்றை ஆக்கி அபிநயிப்பார்

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு** :

- ♦ ஏற்கெனவே மாணவர்கள் பார்வையிட்ட கடற்கரைக் காட்சிகளையும் இறுவட்டில் பார்வையிட்டு நயந்த காட்சிகளையும் பற்றிக் கலந்துரையாடுதல்.
- ♦ கலந்துரையாடப்பட்ட விடயங்களைக் கொண்டு குழு நடனம் ஒன்றை ஆக்குவதற்குத் தூண்டுதல்.
- ♦ ஆக்கி அபிநயித்த நடனத்திற்கும் நேரில் பார்த்த காட்சிக்குமான வித்தியாசங்களை மாணவரிடம் கேட்டறிதல்.
- ♦ கடற்கரைக் காட்சியை நயந்து அபிநயிக்கும் போது ஏற்பட்ட இடர்பாடுகளை வினாவுதல்.
- ♦ விடுபட்ட விடயங்களைக் கோர்த்து முழுமையாக நடனம் ஒன்றை உருவாக்குதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**:

- கடற்கரையில் இடம்பெறும் இயற்கை நிகழ்வுகளை விபரிப்பார்.
- கடற்கரைக் காட்சி தொடர்பான குழு நடனம் ஒன்றினை ஆக்கி அபிநயிப்பார்.

**தேர்ச்சி 2.0 :** சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றையும் வெவ்வேறு வகையான பாடல்களையும், கோர்வைகளையும் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 2.2 :** கதைப்பாடல்களுக்கு அபிநயம் அமைத்துக் கொலுப்பித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 2.2.1 :** கதைப்பாடல்களுக்கு அபிநயத்தினை அமைப்போம் (வேடனும் புறாவும்)

**பாட வேளைகள்** : 03

**தர உள்ளீடு** : கதைப்பாடல் எழுதப்பட்ட அட்டை

**கற்றற் பேறுகள்** :

- பாடலின் பொருளைக் கூறுவார்.
- பொருளிற்கேற்ப முத்திரைப் பிரயோகங்களை மேற்கொள்வார்.
- அபிநயப் பாடலுக்குத் தாமே அபிநயம் அமைப்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**:

- ஏற்கெனவே கற்ற அபிநயப் பாடலை நினைவுபடுத்தி அபிநயம் செய்தல்.
- பாடல் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- அபிநயிக்கும்போது இடம்பெறும் முக்கிய அம்சங்கள்
  - தகுந்த முகபாவம்
  - பொருத்தமான அங்க அசைவு
  - பொருத்தமான முத்திரைப் பிரயோகம்
  - பொருத்தமான பாத அசைவுகள்
  - பாடல் பயிற்சி
- வேடனும் புறாவும் கதைப் பாடல் செயலொழுங்கினைப் பின்பற்றவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- பாடலின் பொருளைக் கூறுவார்.
- உரிய முத்திரைகளைப் பிரயோகிப்பார்.
- தானே அபிநயப் பாடலை அபிநயிப்பார்.

**தேர்ச்சி 2.0** : சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றையும் வெவ்வேறு வகையான பாடல்களையும், கோர்வைகளையும் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : கதைப்பாடல்களுக்கு அபிநயம் அமைத்துக் கொலுப்பித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 2.2.2** : கதைப்பாடல்களுக்கு அபிநயத்தினை அமைப்போம் (கண்ணன் மாடு கன்று மேய்த்து).

**பாட வேளைகள்** : 03

**தர உள்ளீடு** : கதைப்பாடல் எழுதப்பட்ட அட்டை

**கற்றற் பேறுகள்** :

- பாடலின் பொருளைக் கூறுவார்.
- பொருளிற்கேற்ப முத்திரைப் பிரயோகங்களை மேற்கொள்வார்.
- தாமே அபிநயம் அமைப்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**:

- வேடனும் புறாவும் கதைப்பாடல் செயலொழுங்கினைப் பின்பற்றவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- பாடலின் பொருளைக் கூறுவார்.
- உரிய முத்திரைகளைப் பிரயோகிப்பார்.
- தானே அபிநயப் பாடலை அபிநயிப்பார்.

**தேர்ச்சி 3.0** : பரதநாட்டியத்துக்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும் அடவுகளையும் அங்கபேதங்களையும் ஜாதி ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : பரதநாட்டியத்துக்குரிய முத்திரைகளின் விநியோகங்களை அபிநயிப்பார்.

**செயற்பாடு 3.1.3** : அஸம்யுத ஹஸ்தங்களில் சர்ப்பசிரஸ் - சிம்ஹமுகம் வரையிலான முத்திரைகளுக்குரிய விநியோகங்களைக் கூறி அபிநயிப்போம்.

**பாட வேளைகள்** : 03

**தர உள்ளீடு** : முத்திரை விநியோகங்கள் எழுதப்பட்ட அட்டைகள்

**கற்றற் பேறுகள்** :

- ஸ்லோகங்களைத் தெளிவாக உச்சரித்துக் கூறுவார்.
- ஸ்லோகங்களிற்குரிய பிரயோகங்களை மேற்கொள்வார்.
- ஸ்லோகங்களின் பொருள் கூறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**:

- ஏற்கெனவே கற்ற விநியோகங்களிற்குரிய கற்பித்தல் செயலொழுங்கை மேற்கொள்ளவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- சர்ப்பசிரஸ் - சிம்ஹமுகம் வரையான முத்திரை விநியோகங்களைச் சரியான உச்சரிப்புடன் முழுமையாக அபிநயித்துக் காட்டுவார்.
- அவற்றின் கருத்துக்களைக் கூறுவார்.

**தேர்ச்சி 3.0 :** பரதநாட்டியத்துக்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும் அடவுகளையும் அங்க பேதங்களையும் ஜாதி ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3 :** பரதநாட்டியத்துக்குரிய அடிப்படை அடவுகளை அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.3.3 :** தத்தெய் தாஹா 2ஆவது, 3ஆவது, 4ஆவது அடவுகளை அபிநயிப்போம்.

**பாட வேளைகள் :** 10

**தர உள்ளீடு :** பாத நிலைகளுக்கான வரைபடங்கள், தட்டுக்கழி, தட்டுப்பலகை.

**கற்றற் பேறுகள் :**

- தத்தெய் தாஹா அடவினை அபிநயித்துக் கொலுப்பித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

- தத்தெய் தாஹா அடவின் பாதநிலை, அங்கநிலை, சொற்கட்டு, தாளம் என்பன பற்றிக் கலந்துரையாடுதல்.
- பாதநிலைகளின் வரைபடங்களைக் காட்சிப்படுத்தல்.
- தத்தெய் தாஹா அடவினை ஆசிரியர் அபிநயித்துக் காட்டுதலும் மாணவர் அவதானித்து அபிநயித்தலும்.
- திரிகாலங்களில் பயிற்சியளித்தல்.
- அடவின் சொற்கட்டைத் திரிகாலங்களில் தாளத்துடன் கொலுப்பித்தல் .
- மாணவர்களை குழுக்களாகப் பிரித்து ஒரு குழு அபிநயிக்கும் போது மற்றைய குழு தாளம் போடுவதற்கு வழிப்படுத்துதல்.
- ஒரு குழுவை அவதானித்து ஏனைய குழுக்கள் கருத்துக் கூறுதல்

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- இவ்வடவின் சொற்கட்டைக் கூறுவார்.
- தத்தெய் தாஹா அடவினைத் திரிகாலங்களில் அபிநயித்துக் காட்டுவார்.
- ஆதி தாளத்தில் இவ் அடவினைத் திரிகாலங்களில் கொலுப்பித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி 3.0** : பரதநாட்டியத்துக்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும் அடவுகளையும் அங்க பேதங்களையும் ஜாதி ஹஸ்தங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.4** : வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.4.1** : கோலாட்ட நடனத்தினை ஆடுவோம்.

**பாட வேளைகள்** : 03

**தர உள்ளீடு** : கோலாட்டப் பாடல் அடங்கிய அட்டை, கோலாட்ட நடனம் உள்ளடங்கிய காணொளி இறுவட்டு.

**கற்றற் பேறுகள்** :

- கோலாட்ட நடனத்தினை கிராமியப் பாங்குடன் ஆடுவார்.
- பல்வேறு கோலங்களில் அபிநயிப்பார்.
- கோலாட்ட நடனத்தின் சிறப்பம்சங்களை பட்டியல் படுத்துவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**:

- ஏற்கெனவே பார்வையிட்ட கோலாட்ட நடனத்தினை நினைவு கூர்தல்.
- கோலாட்டப் பாடல் அடங்கிய பாடல் அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- காணொளி இறுவட்டைப் பார்வையிடச் செய்தல்.
- கொடுக்கப்பட்ட பாடலுக்கு ஏற்ற வகையில் கிராமியப்பாங்கிலான பாதச்சுவடுகளுடன் கோல்களை இணைத்துப் பயிற்சியில் ஈடுபடுத்துதல்.
- வெவ்வேறு விதமான கோலங்களில் அபிநயிக்கச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துப் பயிற்சியில் ஈடுபடச் செய்தல்.
- முழுமையாக அபிநயித்து நிறைவு செய்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**:

- கோலாட்டப் பாடலின் சிறப்பம்சங்களை தெளிவுற எடுத்துரைப்பார்.
- கோலாட்டப் பாடலை இசையுடன் பாடுவார்.
- கிராமியப் பாதச்சுவடுகளுடன் பல்வேறு கோலங்களில் கோலாட்டத்தினை அபிநயிப்பார்.

**தேர்ச்சி 4.0**: நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : அடவுகளிற்குரிய இசைக்குறியீடுகளைப் பிரயோகிப்பார்.

**செயற்பாடு 4.2.5** : தத்தெய் தாஹா ( 1 - 4) அடவின் சொற்கட்டினை இசைக்குறியீட்டுடன் எழுதுவோம்.

**பாட வேளைகள்** : 02

**தர உள்ளீடு** : தத்தெய்தாஹா அடவு இசைக்குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டை.

**கற்றற் பேறுகள்** :

- தத்தெய் தாஹா (1 - 4) அடவினை இசைக்குறியீட்டுடன் எழுதுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**:

- செய்முறை வகுப்பில் கொலுப்பித்த தத்தெய் தாஹா அடவினை ஆதி தாளத்தில் கொலுப்பிக்கச் செய்தல்.
- தத்தெய்தாஹா இசைக்குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- ஆதி தாளத்தில் கொலுப்பித்த அடவினை ($1_4 00$) ஒரு அட்சரத்திற்கு 4 மாத்திரைகள் வருமென்பதைக் கூறுதல்.
- அவ்வாறே மத்திம துரித காலங்களிலும் மாத்திரைகள் மாறாது என்பதை நினைவுபடுத்தல்.
- மாணவர்கள் ஆதிதாளக் கணக்குகளை எழுதும்போது கவனிக்க வேண்டியவை

| | |
|---|---|
| - 1ஆம் காலம் | 32 மாத்திரைகள் |
| - 2அம் காலம் | |
| - 3ஆம் காலம் | |

- சொற்கட்டுகள் இரட்டிப்படைந்தாலும் அட்சர எண்ணிக்கையோ மாத்திரைக் கணக்கோ மாறமாட்டாது.

**கணிப்பீடும் மதிப்பீடும்**:

- தத்தெய்தாஹா அடவினை ஆதி தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுவார்.
- அடவினை இசைக்குறியீட்டுடன் எழுதுவார்.

**தேர்ச்சி 4.0 :** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.4 :** இசைக்கருவிகளை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.4.1 :** இசைக்கருவிகளை வகைப்படுத்துவோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடு :** இசைக்கருவி வகைகள் அடங்கிய அட்டை.

**கற்றற் பேறுகள் :** இசைக்கருவி வகைகளை இனங்காண்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ஏற்கெனவே மாணவர்கள் அறிந்தும் பார்த்தும் உள்ள இசைக்கருவிகளைப் பற்றி மாணவர்களிடம் கேட்டறிதல்.
- இசைக்கருவி வகைகள் அடங்கிய அட்டையைக் காட்சிப்படுத்திப் பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்துதல்.
  - தோற்றம்
  - ஒலி வேறுபாடு
- நரம்புகளை இழுத்துக்காட்டி அவற்றை அதிரச் செய்து இசை எழுப்பப் பயன்படும் கருவிகள் நரம்புக் கருவிகள்.
  உதாரணம் - வீணை , வயலின்
- துளையின் வழியே காற்றினைச் செலுத்தி அக்காற்றை அதிரச்செய்து இசை எழுப்பப் பயன்படும் கருவிகள் துளைக்கருவிகள்.
  உதாரணம் - புல்லாங்குழல், நாதஸ்வரம்
- தோலினை இழுத்துக்கட்டி அதனை அதிரச்செய்து ஓசை எழுப்பப்பயன்படும் கருவிகள் தோற்கருவிகள் எனப்படும்.
  உதாரணம் - மிருதங்கம், தவில்
- உலோகத்தாலான கருவிகள் கஞ்சக்கருவிகள் எனப்படும்.
  உதாரணம் - நட்டுவாங்கத்தாளம்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- இசைக் கருவிகளின் வகைகளைக் கூறுவார்.
- இசைக் கருவியின் தோற்றம், ஒலி வேறுபாடுகளை இனங்காண்பார்.

**தேர்ச்சி 4.0 :** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.4 :** இசைக்கருவிகளை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.4.2 :** மங்களவாத்தியமான நாதசுரம் பற்றி அறிந்து கொள்வோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடு :** நாதசுரத்தின் படம், விடய உள்ளடக்க அட்டை.

**கற்றற் பேறுகள் :**

- நாதசுரத்தினை இனங்காண்பார்.
- அதன் தோற்றம், பாவனை முறை பற்றி விபரிப்பார்.
- பெயர் வரக் காரணம் பற்றிக் குறிப்பிடுவார்.
- நாதசுரக் கலைஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ஆலயங்களுடனான மக்கள் தொடர்பு, விழாக்கள் பற்றியும் பின்வருவன பற்றியும் கலந்துரையாடுதல்.
- ஏற்கனவே அறிந்த இசைக்கருவிகள்.
- நாதசுரத்தின் பக்கவாத்தியம்.
- மங்கள வாத்தியம்.
- நாதசுரத்தின் படத்தைக் காட்சிப்படுத்தி விடய உள்ளடக்க அட்டையையும் காட்சிப்படுத்திப் பின்வரும் விடயங்களை விளக்குதல்.
    - நாதசுரத்தின் அமைப்பு.
    - ஆச்சா மரத்தில் செய்யப்படுகிறது.
    - இதன் மேல் பகுதி சிறுத்தும் கீழ்ப்பகுதி சிறிது அகன்றும் காணப்படும்.
    - நாதசுரம் வாசிக்க ‘‘சீவாளி’’ பயன்படுத்தப்படும்.
    - நாதசுரத்தின் சிறப்பம்சங்கள்.
    - நாதசுரம் எனப் பெயர் வரக் காரணம்.
    - நாதசுரம் செய்யப் பயன்படும் பொருட்கள்.
    - நாதசுரக் கலைஞர்கள்.

**கணிப்பீடும் / மதிப்பீடும் :**

- நாதசுரத்தின் அமைப்புப் பற்றிக் கூறுவார்.
- அதன் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுவார்.
- பெயர் வரக் காரணம் குறிப்பிடுவார்.
- நாதசுரம் செய்யப்பயன்படும் பொருட்களைக் குறிப்பிடுவார்.
- நாதசுரக் கலைஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 5.0** : நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.

**தேர்ச்சிமட்டம் 5.1** : இந்திய நடனத்தின் கலாசாரப் பின்னணியை அறிவார்.

**செயற்பாடு 5.1.2** : இலங்கையில் பரதநாட்டியம் பற்றி அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 01

**தர உள்ளீடுகள்** : இலங்கையில் நடனக்கலை நிலவிய காலகட்டத்தின் சிற்ப ஆதாரப்படங்கள், சுருக்கக் குறிப்புகள்.

**கற்றற் பேறுகள்** :

- இலங்கையில் நிலவிய நடனக்கலை பற்றி அறிந்து குறிப்பிடுவார்.
- தற்போதைய காலகட்டத்தில் நிலவும் பரதநாட்டியத்தை அறிந்து குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு** :

- படங்களைக் காட்சிப்படுத்தல்.
- பின்வருவனவற்றைக் கலந்துரையாடுதல்.
    - புராதன காலத்தில் நிலவிய நடனக்கலை.
    - சோழர் காலத்தில் இலங்கையில் நிலவிய பரதநாட்டியம்.
    - அந்நியராட்சியின்போது இடம்பெற்ற சுதேச கலையழிப்புகள்.
    - கி.பி 1344 இலங்கைக்கு வந்த மொறோக்கா நாட்டுப் பயணியின் பிரயாணக் குறிப்புகள்.
    - சிற்ப ஆதாரங்கள்.
    - வையா பாடல், கைலாயமாலை போன்ற நூல் ஆதாரங்கள்.
    - இலங்கையைச் சேர்ந்த ஆனந்த குமாரசுவாமி அவர்களின் அபிநயதர்ப்பணம் மொழிபெயர்ப்பு.
    - சுவாமி விபுலானந்தரின் நூல்கள்.
    - இலங்கையில் நடனக்கலை வளர்ச்சிக்கு வித்திட்டோர் பெயர் விபரம்.
    - தற்போதுள்ள நிறுவன ரீதியான நடன வளர்ச்சி.

    சுருக்கக் குறிப்பெடுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

- இலங்கையில் பல்வேறு காலகட்டங்களில் நிலவிய பரதநாட்டியம் பற்றி அறிந்து குறிப்பிடுவார்.
- தற்போது இலங்கையில் நிலவும் பரதநாட்டியம் பற்றி அறிந்து குறிப்பிடுவார்.